# HSBC Bank (Singapore) Limited-இன் ஆண்டு அறிக்கை 2025

## 31 டிசம்பர் 2025 இல் முடிந்த நிதியாண்டின் இலாபம் மற்றும் இழப்பு அறிக்கை

| | 2025<br>S$'000 | 2024<br>S$'000 |
|---|---|---|
| வட்டி வரவு | **1,095,916** | 1,347,222 |
| வட்டிச் செலவு | **(482,472)** | (627,195) |
| **நிகர வட்டி வரவு** | **613,444** | 720,027 |
| கட்டண மற்றும் தரகு வரவு | **226,839** | 221,875 |
| கட்டண மற்றும் தரகுச் செலவு | **(93,344)** | (85,439) |
| **நிகர கட்டண மற்றும் தரகு வரவு** | **133,495** | 136,436 |
| நிகர வாணிக வரவு | **230,982** | 147,737 |
| மற்ற வரவு | **3,457** | 9,497 |
| **மொத்த இயக்கு வரவு** | **981,378** | 1,013,697 |
| செலவுகள்: | | |
| - ஊழியர் கட்டணங்கள் | **(174,031)** | (153,618) |
| - உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரத்தின் மதிப்பிறக்கம் | **(9,877)** | (8,679) |
| - புலனாகாத சொத்துகளின் முதலீட்டுத் தள்ளுபடி | **(820)** | – |
| - மற்ற இயக்குச் செலவுகள் | **(311,312)** | (290,543) |
| **நிகர இயக்கச் செலவுகள்** | **(496,040)** | (452,840) |
| **எதிர்பார்த்த கடன் நஷ்டங்கள் மற்றும் பிற கடன் சேதாரக் கட்டணங்களின் மாறுதல் வரவு** | **485,338** | 560,857 |
| எதிர்பார்த்த கடன் நஷ்டங்கள் மற்றும் பிற கடன் சேதார கட்டணங்களில் மாறுதல் | **(51,362)** | (59,297) |
| **வரிக்குமுன் இலாபம்** | **433,976** | 501,560 |
| வரிச் செலவு | **(71,019)** | (83,297) |
| **ஆண்டுக்குரிய இலாபம்** | **362,957** | 418,263 |

இக்குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகும்.

## 31 டிசம்பர் 2025 - இல் முடிவுற்ற நிலவரப்படி நிதிநிலை இருப்பு அறிக்கை

| | 2025<br>S$'000 | 2024<br>S$'000 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கிகளில் உள்ள ரொக்கமும் இருப்பும் | **333,120** | 265,771 |
| சிங்கப்பூர் அரசாங்கக் கருவூல உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் | **4,898,575** | 6,312,481 |
| மற்ற அரசாங்கக் கருவூல உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் | **3,349,504** | 3,505,660 |
| சார்பியச் சொத்துக்கள் | **4,347** | 9,437 |
| வங்கிகளில் உள்ள நிலுவைகளும் வைப்புகளும், மற்றும் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | **55,711** | 38,602 |
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும் | **11,470,260** | 10,700,913 |
| நேரடி உடைமை நிறுவனத்திடமிருந்து வரவேண்டியவை | **99,654** | 10,482 |
| சம்பந்தப்பட்ட பெருநிறுவனங்களிடமிருந்து வரவேண்டியவை | **11,729,158** | 12,591,818 |
| மற்றச் சொத்துகள் | **431,079** | 470,299 |
| கூட்டு முயற்சியில் முதலீடு | **—** | 11,638 |
| உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரம் | **129,943** | 111,789 |
| புலனாகாதச் சொத்துகள் | **—** | 820 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | **412** | 895 |
| **மொத்தச் சொத்துகள்** | **32,501,763** | 34,030,605 |
| **கடன் பொறுப்புகள்** | | |
| சார்பியச் சொத்துக்கள் | **8,692** | 4,075 |
| வங்கிகளின் வைப்புத்தொகைகள் மற்றும் இருப்புகள் | **40,386** | 47,341 |
| வங்கி-அல்லாத வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைகள் | **29,335,403** | 30,793,322 |
| நேரடி உடைமை நிறுவனத்திற்குச் சேர வேண்டியவை | **14,810** | 7,919 |
| சம்பந்தப்பட்ட பெருநிறுவனங்களுக்குச் சேர வேண்டியவை | **820,659** | 803,261 |
| மற்றக் கடன் பொறுப்புகள் | **327,296** | 384,587 |
| நடப்பு வரி கடன் பொறுப்புகள் | **76,430** | 87,165 |
| **மொத்தக் கடன் பொறுப்புகள்** | **30,623,676** | 32,127,670 |
| **நிகரச் சொத்துகள்** | **1,878,087** | 1,902,935 |
| **சொத்து மதிப்பு** | | |
| பங்கு மூலதனம் | **1,530,000** | 1,530,000 |
| காப்பு இருப்புகள் | **72,900** | 69,331 |
| திரண்ட இலாபங்கள் | **275,187** | 303,604 |
| **மொத்தச் சொத்து மதிப்பு** | **1,878,087** | 1,902,935 |

இக்குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகும்.

## மூலதனம் போதிய விகிதங்கள்

டிசம்பர் 31-இல் சிங்கப்பூரில் இணைக்கப்பட்ட வங்கிகளுக்கான இடர் அடிப்படையிலான மூலதனம் போதிய தேவைகளைக் குறித்த MAS அறிவிப்பு 637-இல் வரையறுக்கப்பட்டுள்ள மூலதனம் போதிய விகிதங்கள் மற்றும் கூறுகள்:

| | 2025<br>S$'m | 2024<br>S$'m |
|---|---|---|
| **இடர் நிறையிடப்பட்ட சொத்துக்கள்** | | |
| கடன் அபாயம் | **7,389** | 7,307 |
| எதிர் கட்சி கடன் அபாயம் | **25** | 16 |
| சந்தை அபாயம் | **22** | 6 |
| செயல்பாட்டு அபாயம் | **1,611** | 1,401 |
| | **9,047** | 8,730 |

| | 2025<br>S$'m | 2024<br>S$'m |
|---|---|---|
| **மூலதன கூறுகள்** | | |
| அடுக்கு 1 மூலதனம் | **1,835** | 1,861 |
| அடுக்கு 2 மூலதனம் | **212** | 206 |

| | 2025<br>% | 2024<br>% |
|---|---|---|
| **மூலதன விகிதங்கள்** | | |
| பொதுவான சொத்து மதிப்பு அடுக்கு 1 விகிதம் | **20.28%** | 21.32% |
| அடுக்கு 1 விகிதம் | **20.28%** | 21.32% |
| மொத்த மூலதன விகிதம் | **22.63%** | 23.68% |

HSBC

HSBC Bank (Singapore) Limited நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது (நிறுவன பதிவு எண். 201420624K).

## இயக்குநர்கள்

இந்த அறிக்கையின் தேதியில் அலுவலகத்தில் உள்ள நிறுவனத்தின் இயக்குநர்கள் பின்வருமாறு:

Lee Yoke Sim Penny
Wong Kee Joo
Tay Cheng Kim Karen
Ngan Wan Sing Winston
Liew Lien Ban
James Coyle
Suzanna Maud Carr (30 ஜனவரி 2026 அன்று நியமிக்கப்பட்டார்)

## HSBC Bank (Singapore) Limited நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான சார்பற்ற கணக்காய்வாளரின் அறிக்கை

### நிதிநிலை அறிக்கைகளுக்கான கணக்காய்வு பற்றிய அறிக்கை

**எங்கள் அபிப்பிராயம்**

எங்கள் அபிப்பிராயப்படி, இதனுடன் கூடிய HSBC Bank (Singapore) Limited ('நிறுவனம்') நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள், நிறுவனச் சட்டம் 1967 ('சட்டம்') விதிகளுக்கும் சிங்கப்பூர் நிதி அறிக்கை தரநிலைகளுக்கும் ('FRSகள்') இணங்க முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன; இதன் மூலம் 31 டிசம்பர் 2025 நிலவரப்படி நிறுவனத்தின் நிதிநிலை இருப்பையும், அந்நாளில் முடிந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் நிதியியல் செயல்பாடுகளையும், சொத்து மதிப்பு மாற்றங்கள் மற்றும் நிறுவனத்தின் பணப்புழக்கங்கள் ஆகியவை உண்மையான மற்றும் நியாயமான காட்சியளிப்பாக வழங்குகின்றன.

நாங்கள் கணக்காய்வு செய்துள்ளவை

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடங்கியவை:

- 31 டிசம்பர் 2025 அன்று முடிந்த நிதியாண்டிற்கான விரிவான வருமான அறிக்கை;
- 31 டிசம்பர் 2025 -இல் முடிவுற்ற நிதியாண்டிற்கான நிதிநிலை இருப்பு அறிக்கை;
- அந்நாளில் முடிந்த நிதியாண்டிற்கான சொத்து மதிப்பு மாற்றங்களின் அறிக்கை;
- அந்நாளில் முடிந்த நிதியாண்டிற்கான பணப்புழக்க அறிக்கை; மற்றும்
- நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள், முக்கிய கணக்கியல் கொள்கை தகவல்களை உட்பட.

**அபிப்பிராயத்தின் அடிப்படை**

நாங்கள் எங்கள் கணக்காய்வை சிங்கப்பூர் தணிக்கை வரையறைகளுக்கு ('SSAs') இணங்கச் செய்துள்ளோம். அத்தகைய வரையறைகளின் கீழ் எங்களுக்கு உள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் 'கணக்காய்வாளருக்கு நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வு செய்வதன் மீதானப் பொறுப்புகள்' பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன.

எங்களிடமுள்ள கணக்காய்வு ஆதாரங்கள் எங்கள் கணக்காய்வுக்கான கருத்திற்குப் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நம்புகிறோம்.

**சார்பற்றமை**

நாங்கள், பொது நல நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளுக்கான கணக்காய்வுகளுக்கு பொருந்துமாறு, பொது கணக்காளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணையத்தின் தொழில்முறை நடத்தை மற்றும் நெறிமுறைச் சட்டம் ('ACRA Code')க்கு இணங்கவும், சிங்கப்பூரில் பொது நல நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளுக்கான கணக்காய்வுகளுக்கு தொடர்புடைய நெறிமுறை தேவைகளுக்கும் இணங்கவும், நிறுவனத்திலிருந்து சுயாதீனமாக உள்ளோம். மேலும், இத்தேவைகளுக்கும் ACRA Code-க்கும் இணங்க எங்களது பிற நெறிமுறை பொறுப்புகளையும் நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

**மற்றத் தகவல்**

மற்றத் தகவல்கள் நிர்வாகத்தின் பொறுப்பாகும். மற்றத் தகவல்களில் இயக்குநரின் அறிக்கை மற்றும் MAS 608 துணைத் தகவல் ஆகியவை உள்ளடங்கும். ஆனால் நிதிநிலை அறிக்கை மற்றும் எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை இதில் அடங்காது.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் அபிப்பிராயம் மற்றத் தகவல்களுக்குப் பொருந்தாது. நாங்கள் அதற்கு எந்தவகையான உறுதி முடிவும் தெரிவிக்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வின் மீதான எங்கள் பொறுப்பு என்பது மற்றத் தகவல்களை வாசித்து, அவ்வாறு வாசிக்கும்போது, அத்தகவல்கள், பொருளாதார ரீதியாக நிதிநிலை அறிக்கைகளுடன் அல்லது கணக்காய்வில் எங்களுக்குக் கிட்டிய அறிவுடன் சீரற்று உள்ளதா எனப் பரிசீலிப்பதும், அல்லது வேறுவகையில் பொருளாதார ரீதியாகத் தவறாக உள்ளதா எனப் பரிசீலிப்பதும் ஆகும். நாங்கள் நிகழ்த்தியுள்ள வேலையின் அடிப்படையில், இந்த மற்றத் தகவல்களில் பொருள் தவறாக உள்ளது என்று முடிவெடுத்தால், நாங்கள் இந்த உண்மையை அறிவிக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் அறிவிக்க எதுவும் இல்லை.

**நிர்வாகம் மற்றும் இயக்குநர்களுக்கு நிதிநிலை அறிக்கைகளின் மீதானப் பொறுப்புகள்**

சட்ட விதிகள் மற்றும் FRSகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நோக்கை வழங்கும் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், சொத்துகளை அங்கீகரிக்கப்படாதப் பயன்பாடு அல்லது உரிமை மாற்றுதல் ஆகியவற்றுக்கு எதிராக பாதுகாக்கப்பட்டுள்ளதற்கான நியாயமான உறுதி வழங்குவதற்குப் போதுமான உள் கணக்கு வைப்புக் கட்டுப்பாடுகள் அமைப்பு ஒன்றை ஏற்படுத்திப் பராமரிப்பதற்கும்; உண்மையான மற்றும் நியாயமான முறையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதற்கும் சொத்துகளின் பொறுப்புகளைப் பராமரிப்பதற்கும் அத்தியாவசியமாகிய முறையாக அங்கீகரிக்கப்பட்ட பணப்பரிமாற்றங்களுக்கும் மற்றும் அவைப் பதிவுசெய்யப்படுவதற்கும் நிர்வாகமே பொறுப்பு.

நிதிநிலை அறிக்கைகளை தயாரிக்கையில், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாக தொடர்வதற்கான நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பிடல் நிர்வாகத்தின் பொறுப்பாகும். அவ்வாறு செய்கையில் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் தொடர்பான விடயங்கள் தகுந்தவாறு வெளிப்படுத்துதலும் நிர்வாகம் இந்நிறுவனத்தைக் கலைத்துவிடவோ அல்லது இயக்கத்தை நிறுத்தவோ எண்ணினாலோ அல்லது அப்படிச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றாலோ ஒழிய மற்ற சூழ்நிலைகளில் தொடர்ந்து இயங்கும் நிறுவனத்துக்கான கணக்கியல் அடிப்படையில் பயன்படுத்துதலும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையிடல் முறைகளை மேற்பார்வையிடுவது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

**கணக்காய்வாளருக்கு நிதிநிலை அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதன் மீதானப் பொறுப்புகள்**

நிதிநிலை அறிக்கைகள் ஒரு முழு அறிக்கையாக மோசடி காரணமாகவோ அல்லது பிழை காரணமாகவோ பொருளாதார ரீதியான தவறுடன் கூடிய அறிக்கையாக இல்லாமல் இருக்க நியாயமான உறுதி பெறுவதும் எங்கள் அபிப்பிராயம் உள்ளிட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவதே எமது நோக்கம். நியாயமான உறுதி என்பது ஒரு உயர் மட்ட உறுதியாகும், ஆனால் SSA-க்கு இணங்க செய்யப்பட்ட கணக்காய்வு பொருளாதார ரீதியான தவறுகள் ஏதேனும் இருப்பின் அதனை எப்போதும் கண்டறியும் என்பது உத்தரவாதம் கிடையாது. மோசடி அல்லது பிழை மூலமாக ஏற்படும் தவறுடன் கூடிய அறிக்கைகள், தனித்தனியாகவோ அல்லது ஒரு தொகுப்பாகவோ, இந்த நிதிநிலை அறிக்கைகளை அடிப்படையாக வைத்துப் பயனர்கள் எடுக்கும் முடிவுகளில் நியாயமான அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கும் பட்சத்தில் அவை பொருளாதார ரீதியான தவறுகள் எனக் கருதப்படும்.

SSA-க்கு இணங்க நாங்கள் செய்த ஆய்வின் ஒரு பகுதியாக, இந்த கணக்காய்வு முழுவதும் தொழில்முறை நியாயத்தீர்ப்பைக் கையாண்டதுடன் தொழில்முறை ஐயுறவையும் பேணி வந்தோம். மேலும் நாங்கள் பின்வரும் பணிகளையும் செய்திருக்கிறோம்:

- மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படக்கூடிய பொருளாதார ரீதியான தவறுகளின் அபாயங்களை அடையாளம் கண்டு மதிப்பிட்டு, அந்த அபாயங்களுக்கு ஏற்ப கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து மேற்கொண்டு, எங்கள் அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக இருக்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களைப் பெறுதல். மோசடி காரணமாக ஏற்படும் பொருளாதார ரீதியான தவறை கண்டறியாத அபாயம், பிழையால் ஏற்படும் தவறை விட அதிகமாகும்; ஏனெனில் மோசடியில் கூட்டுச்சதி, போலி உருவாக்கம், நோக்கமுடைய விடுபாடுகள், தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாடுகளை மீறுதல் போன்றவை இடம்பெறக்கூடும்.
- சூழ்நிலைகளுக்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக, கணக்காய்விற்கு தொடர்புடைய உட்கட்டுப்பாடுகளைப் பற்றிய புரிதலைப் பெறுதல்; ஆனால் இது நிறுவனத்தின் உள் கட்டுப்பாடுகளின் செயல்திறன் குறித்து அபிப்பிராயம் வெளிப்படுத்துவதற்கான நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மையையும் மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகளையும் மதிப்பிடுதல்.
- நிர்வாகம் பயன்படுத்தியுள்ள தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற கணக்கியல் அடிப்படையின் பொருத்தத்தைப் பற்றி முடிவு செய்து, பெறப்பட்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையில், நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் திறனை குறித்து முக்கிய சந்தேகம் எழுப்பக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளுடன் தொடர்புடைய பொருளாதார உறுதியற்ற நிலை இருக்கிறதா என்பதை நிர்ணயித்தல். பொருளாதார உறுதியற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், நாங்கள் எங்கள் கணக்காய்வு அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்பாடுகளில் கவனத்தை ஈர்க்க வேண்டும் அல்லது, அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் எங்கள் அபிப்பிராயத்தை மாற்றுதல். எங்கள் முடிவுகள் அனைத்தும் இக்கணக்காய்வு அறிக்கையின் தேதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினை அடிப்படையாகக் கொண்டவை. இருப்பினும், வருங்காலத்தில் ஏற்படும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் இந்நிறுவனத்தைத் தொடர்ந்து இயங்க முடியாமல் நிறுத்தலாம்.
- நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த காட்சியமைப்பு, அமைப்பு மற்றும் உள்ளடக்கம் (வெளிப்பாடுகள் உட்பட) ஆகியவற்றை மதிப்பிட்டு, நிதிநிலை அறிக்கைகள் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை நியாயமான காட்சியளிப்பை வழங்கும் வகையில் பிரதிபலிக்கின்றனவா என்பதை ஆய்வு செய்தல்.

நாங்கள் இயக்குநர்களுடன் மற்ற விடயங்களோடு, கணக்காய்வுக்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்பரப்பு மற்றும் காலம் இவற்றுடன் எங்கள் கணக்காய்வின் போது நாங்கள் அடையாளம் கண்ட உட்கட்டுபாடுகளில் உள்ள எதேனும் முக்கிய குறைபாடுகள் உள்ளிட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் ஆகியன தொடர்பாக தொடர்புகொள்கிறோம்.

**மற்றச் சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் பற்றிய அறிக்கை**

எங்கள் அபிப்பிராயத்தின்படி, இந்நிறுவனம் சட்டப்படி வைத்திருக்க வேண்டிய கணக்கியல் மற்றும் மற்றப் பதிவேடுகள் அனைத்தும் சட்ட விதிகளின்படி முறையாக வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

PricewaterhouseCoopers LLP
பொதுக் கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கணக்கறிஞர்கள்

சிங்கப்பூர், 6 பிப்ரவரி 2026

## ஆண்டறிக்கையும் கணக்குகளும்

கணக்குகளின் குறிப்புகள் தணிக்கையான நிதி அறிக்கைகளின் முக்கியப் பகுதியாகும். அறிக்கைகளையும் வங்கியின் பலாபலன்களையும் வங்கியின் தணிக்கையான நிதி அறிக்கைகளின் முழுத் தொகுப்பையும் பார்க்காமல் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. கணக்குகளின் குறிப்புகளை எங்கள் சிங்கப்பூர்க் கிளையில் கேட்டுப் பெறலாம்.

HSBC

HSBC Bank (Singapore) Limited நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது (நிறுவன பதிவு எண். 201420624K).